DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.131/2019**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : சந்தோஷ்குமார்

Father Name : ரவிச்சந்திரன்

VILLAGE :

CALLING :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2025.

(எதிரி ஆஜர். )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கள்ளக்குறிச்சியில் குடியிருந்து சிவில் இன்ஜினியரிங் தொழிலில் சூப்பர்வைசர் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு அ.சா.1 சங்கர் என்பவரை தெரியும். இவ்வழக்கில் இறந்து போன லால்குமார் ஷா என்பவரை எனக்கு தெரியும். ஐஸ்வர்யா ஹெல்த் சென்டர் என்ற கட்டிடத்தில் சூப்பர்வைசராக நான் வேலை பார்த்த போது ஆள்பற்றாக்குறையாக இருந்ததால் சென்னையிலிருந்து ஆட்களை கூட்டி வருவதற்காக தீபக் மற்றும் லால்குமார் ஷா ஆகியோர்கள் 03.02.2018 ம் தேதி சென்றார்கள். யாரோ இரண்டு பேர் வந்து லால்குமார் ஷாவை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள். தீபக் என்பவர் ஹரேராம் என்பவருக்கு போன் செய்து லால்குமார் ஷாவை பிடித்து வைத்திருப்பதாக சொல்லியதன் பேரில் நான், அ.சா.1 சங்கர் மற்றும் சாட்சி எண்.3 ஹரேராம் ஆகியோர்கள் பார்க்க சென்ற போது, சாட்சி எண்.2 தீபக் என்பவரிடம் போன் செய்து கேட்ட போது, அவர் பாலத்தின் மேல் இருப்பதாகவும், லால்குமார் ஷா பாலத்தின் படிக்கட்டில் யாரோ இரண்டு நபர்கள் பிடித்து வைத்திருப்பதாகவும் சொன்னார். அப்போது நான், அ.சா.1 சங்கர் மற்றும் சாட்சி எண்.3 ஹரேராம் ஆகியோர்கள் அங்கு சென்று பார்த்த போது, லால்குமார் ஷா

பேச்சு மூச்சு இல்லாமல் மல்லாக்க கிடந்தார். பிறகு அ.சா.1 சங்கர் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, ஆம்புலன்ஸ்சில் அவரை ஏற்றி மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**</u>

இந்த வழக்கு தொடர்பாக எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் 03.02.2018 ம் தேதியன்று இரவு சுமார் 11.30 மணியிலிருந்து சுமார் 3 மணி நேரம் சி3 எஸ்.எஸ்.காலனி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அந்த விவரத்தை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் சென்று சுமார் அரை மணி நேரம் கழித்து தான் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள்.

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.